**செய்தி வெளியீடு எண்: 709** **நாள் : 24.08.2010**

**<u>தகவல் தொழில் நுட்பவியல்துறை</u>**

## <u>ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கான மின்னணு மாவட்டத் திட்டம்</u>

தமிழக அரசு தகவல் தொழில் நுட்பவியலில் பல சிறப்பு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. தேசிய மின் ஆளுமை திட்டத்தின் கீழ் பல்வேறு துறைகள் கணினிமயமாக்கப்பட்டு வருகின்றன. இவற்றின் ஒரு பகுதியாக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் நலத்திட்டங்களையும் மின்னணு மாவட்டத் திட்டம் மூலம் செயற்படுத்த கண்டறியப்பட்டுள்ளன.

இந்த ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கான_ மின் ஆளுமை பயன்பாட்டு மென்பொருள் (Application Software) திட்டத்தைத் தற்போதுள்ள தேசிய மின் ஆளுமை திட்டத்தின் கீழுள்ள கட்டமைப்பு வசதிகளான தமிழ்நாடு மாநிலப் பெரும்பரப்பு வலையமைப்பு (TNSWAN) மற்றும் மாநிலத் தரவு மைய வசதிகளின் செயல்திறன் மூலம் பொதுச் சேவை மையங்கள் வாயிலாக அதிக அளவிலான சேவைகளைக் கணினிமயமாக்கச் சாத்தியப்படும் வகையில் அமைய இத்திட்டம் வழிவகுக்கிறது.

இந்த மின் ஆளுமை பயன்பாட்டு மென்பொருளின் முக்கிய குறிக்கோள் யாதெனில் கணினிமயமாக்கப்பட்ட வேலைமுறையை மின் ஆளுமை நுழைவாயிலின் ஒரு பகுதியாக உருவாக்கி பொதுச் சேவை மையங்களில் பெறப்படும் விண்ணப்பங்களின் மீது நடவடிக்கை எடுத்து ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மேற்குறிப்பிட்டுள்ள பல்வேறு சேவைகளுக்கு பயன்படுத்திக் கொள்ளலாம்.

### <u>இந்தப் பயன்பாட்டு மென்பொருளின் சிறப்பு அம்சங்கள்</u>

தன்னியக்கம் (Automation) செய்வதன் மூலம் மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அலுவலகத்திலுள்ள வேலை முறைகளையும் மற்றும் உள் செயல் முறைகளின் திறனை அதிகப்படுத்த முடியும். இந்த வேலைமுறை அமைப்பில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அலுவலர்கள் அனைவரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்த வேலை முறையிலுள்ள அனைத்து பணிநிலைகளைக் குறித்து ஆவணங்கள் பராமரிக்கப்படுவதன் மூலம் அவை வருங்கால ஆதாரத்திற்கும், தணிக்கைக்கும் பயன்படும். இது அவரவர் புரியும் பணிகளுக்கு பொறுப்பேற்க வழிவகைச்செய்யும்.

ஒப்பளிப்பு நடவடிக்கை குறிப்புகள் / அறிக்கைகள் தயார் செய்வதற்கும் மற்றும் இது தொடர்பான கணக்கினை தயாரிப்பதற்கான நேரத்தை வெகுவாகக் குறைக்கிறது. இந்த ஒப்பளிப்பு நடவடிக்கை குறிப்பை தயாரிக்கும் காலத்தில் இந்த முறையில் பல்வேறு நலத்திட்டங்களுக்கு மாவட்டளவில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி குறித்த விவரமும் கண்டறியப்படுகிறது.

கணினிமயமாக்கப்பட்ட மென்பொருளின் மூலம் கல்வி ஊக்கத் தொகைகள் வழங்கப்படுவதையும், சேவை வழங்கும் தன்மையும் கண்டறிந்து அறிவுரை கூறுவதற்கான மேலாண்மை தகவல் அறிக்கைகளை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையைச் சேர்ந்த முடிவெடுக்கும் அதிகாரத்திலுள்ளவர்கள் ஆய்வு செய்வதற்கு ஏதுவாக இருக்கும்.

இவ்வாறு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மேற்குறிப்பிடப்பட்டுள்ள சேவைகள் வழங்குவதற்காக தயாரிக்கப்பட்ட மென்பொருள் சேவையை மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு திருமதி தமிழரசி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்களும் இன்று 24.08.2010 நடைபெற்ற விழாவில் வெளியிட்டுள்ளார்கள். இந்நிகழ்ச்சியில் திரு விஸ்வநாத் எ.செகோங்கர், இ,ஆ,ப., செயலாளர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை , திரு. பி.டபிள்யூ.சி. டேவிதார், இ.ஆ.ப., முதன்மைச் செயலாளர், தகவல் தொழில் நுட்பவியல் துறை , திரு ப.சிவசங்கரன், ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறை, திரு.உ.ரவிந்திரன், இயக்குநர், பழங்குடியினர் நலத்துறை, டாக்டர் சந்தோஷ் பாபு, இ.ஆ.ப., முதன்மைச் செயல் அலுவலர், மின்னாளுமை இயக்ககம், ஆகியோரும் இந்த மென்பொருள் வெளியிட்டு விழாவில் பங்கு பெற்றனர். சென்னை தேசிய தகவல் தொடர்பு மையத்தை சேர்ந்த திரு. பி. கிருஷ்ணபிரசாத் மற்றும் திரு.ஜே.அருண்குமார், மூத்த தொழிற் நுட்ப இயக்குநர்கள் இந்த மென்பொருள் உருவாக்கத்தில் பெரும்பங்கு ஆற்றியுள்ளனர்.

**வெளியீடு:– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.**